# விவசாயின் வெற்றிக்கதை

பி.குண்டன்,
துரையட்டி அஞ்சல்,
உடுமலை, தம்மிக்கரை,
நீலகிரி.
அலைபேசி: 9943011902.



---

. நான் சுமார் ஒரு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யும் சிறிய விவசாயி. என்னுடைய நிலத்தில் முள்ளங்கி (சிகப்பு), கேரட் மற்றும் பீன்ஸ் போன்ற காய்கறி வகைகள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறேன். நானும் என் மனைவியும் சேர்ந்து விவசாயம் செய்கிறோம். எங்களுடைய நிலத்தில் இருந்து எங்களுக்கு வாழ்க்கை நடத்தத் தேவையான வருமானம் வந்து கொண்டிருக்கிறது.

அறுவடை நேரங்களில் மட்டும் வேலைக்குத் தொழிலாளர்களை அமர்த்துவேன். எனக்கு நிலத்தில் துண்ணூட்டங்கள் பற்றாக்குறை முக்கிய பிரச்சனை ஆகும். மழைக் காலங்களில் மிகவும் அரிப்பு ஏற்பட்டு நான் பயன்படுத்திய உரங்களும் விவசாய பொருட்களும் கரைந்து விடும்.

மேட்டுப்பாளையம் மற்றும் கோயமுத்தூர் ஆகிய ஊர்கள் நீலகிரி விவசாய உற்பத்தி பொருட்களுக்கு ஏற்ற பெரிய சந்தைகள் ஆகும். நாங்கள் எப்பொழுது எங்கள் விவசாய பொருட்களை மேட்டுப்பாளையத்தில் உள்ள டி.எண்.சி (TNC) மொத்த விலை மண்டியில் விற்பனை செய்வோம். மிக சமீபத்தில் தான் சந்தை ஆய்வாளர் திரு.பிரசாத் மூலம் தினசரி சந்தை நிலவரம் அறிமுகம் ஆனது. அவர் என்னுடைய அலைபேசி எண்ணைப் பெற்று அதன் மூலம் சந்தை நிலவரங்களை செய்திகள் மூலம் அனுப்பினார். அதன் பிறகு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தான் விவசாயிகளுக்கு தினசரி சந்தை நிலவரங்களை அனுப்புவதை அறிந்தேன். மேலும் நான் www.indg.in என்ற இணையதளத்தையும் அறிந்து கொண்டேன்.

எனக்கு அலைபேசியில் இருந்து செய்திகளை எப்படித் திறந்து பார்ப்பது என்று தெரியாது. எனக்கு ஆங்கிலம் தெரியாவிட்டாலும் கூட செய்திகளில் உள்ள எண்களை வைத்து உற்பத்தி விலையைத் தெரிந்து கொண்டேன். இப்பொழுது இதன் மூலம் நான் வீட்டில் உட்கார்ந்தபடியே குறிப்பிட்ட வகைகளுக்கு இலவசமாக தினசரி சந்தை நிலவரங்களை அறிந்து கொள்கிறேன். போக்குவரத்து செலவும் கூட எனக்குக் குறைந்து விட்டது. முதலில் எனக்கு சந்தை நிலவரங்கள் தெரியாததால் நான் என்னுடைய உற்பத்திப் பொருட்களை கேட்ட விலைக்கே விற்று வந்தேன். ஆனால் இப்பொழுது நான் தினசரி சந்தை நிலவரங்கள் மூலம் என்னுடைய பொரட்களை லாபகரமான நல்ல விலையில் விற்பதோடு, போக்குவரத்துச் செலவும் குறைகிறது.

எனக்கு இலவசமாக தகவல் வழங்குவதற்காக மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்பான பணியை நல்ல முறையில் செய்வதற்கு தினசரி சந்தை நிலவரங்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரு அருமையான நிகழ்வு. நான் இந்த சேவையினால் மிகவும் பயனடைந்தேன். மிக்க நன்றி.